MINUTES OF THE PUBLIC HEARING CONDUCTED ON 28.01.2011 AT 10.OO A.M. AT DDC HALL, DISTRICT COLLECTORATE, TIRUNELVELI FOR THE PROPOSED 18MW BIO MASS POWER PLANT OF M/S. AURO MIRA BIO POWER INDIA PRIVATE LIMITED , (AMBPIPL) SHANMUGAPURAM, MELA MARUTHAPPAPURAM VILLAGE, VEERAKERALAMPUDUR TALUK, TIRUNELVELI DISTRICT

PRESENT ; THIRU. M. JAYARAMAN, I.A.S.,
DISTRICT COLLECTOR

THIRU.S. BABU RAMANATHAN, M.E.(Env.Engg)
DISTRICT ENVIRONMENTAL ENGINEER
TNPC BOARD, TIRUNELVELI

PARTICIPANTS :

Thiru. Giridharan, , and his team of M/s Auro Mira Bio Power India Private Limited, Thiru. P. R. Muralidharan, Deputy General Manager, Tamil Nadu Energy Development Agency ( TEDA), Chennai , Thiru. L.J. Joseph, Chief Co-Ordinator, TEDA, Thiru. A. Rajarajan, General Manager, District Industries Centre, Tirunelveli, Tmt. P. Mariammal, Project Manager, DIC, Tirunelveli and Mr. Rajasekaran, Assistant Executive Engineer, Non Conventional Energy Sources, TNEB, Tirunelveli, and more than 100 public from Shanmugapuram and its surroundings (List enclosed)

At the outset the District Environmental Engineer welcomed the gathering and informed the objective of public hearing . The District Collector requested the authorities of M/s. Auro Mira Bio Power India Private Limited to introduce themselves and to explain the details about the project. Accordingly the authorities of M/s, Auro Mira Bio Power India Private Limited , introduced themselves. Thiru. Hariharan, Engineering Head gave a power point presentation on the salient features of the proposed project. Then, the District Collector requested the public to offer their views on the project. Their views and queries were well heard and recorded as below.

Thiru. Murugaiah Reddiar , Ex. District Panchayat Councillor, Shanmugampuram

He stated that about 200 persons are working in this project. He wanted to know about the details of pollution control measures taken by the unit and questioned about the disposal of waste water

Mr. Giridharan , intervened and told that the waste water expected to be generated from the unit would be treated and disposed for the trees within the premises.

Thiru. C. Paramaiah, Annamalaipudur , Panchayat President of Melamaruthappapuram

He raised the number of direct employment that the Mela Maruthappapuram Panchayat would receive

The unit authorities replied that about 25 % of the direct employment will be given based on eligibility

Thiru. Saravanavel Murgaiah, Melakalangal

He welcomed the public hearing conducted through Pollution Control Board He also informed that the Company and the neighbouring villages would grow only if only the

company is established without affecting the villages. He also welcomed industry's principle of contractual plantation of five acres and informed that there are three types of advantages - 1. Employment . 2, Motivation to the Farmers 3. Benefits to the future generation.

Further, he demanded the unit to provide Bore well of 200 to 300 feet depth with 1 HP Electric Motor along with electric supply to the farmers with 3 to 5 acres for contractual plantation. He also informed that the above works would cost about 60000/- and requested for subsidy of Rs. 50000/-. He requested the District Collector to appraise this to the company.

Thiru. Saravanavel Murugaiah also suggested to declare the area between V.K. Pudur and Surandai as drought prone area and to provide borewell with electric motor.

Thiru. Giridharan of the unit informed that the matter would be discussed with the higher authorities for possibilities of extending the above facilities to all the Farmers through the Company or through some social organizations.

Thiru. S. Balakrishnan , Shanmugapuram

He questioned about the qualification and eligibility needed for the employment in the unit. The unit authorities replied that Diploma/Degree in Engineering for Technical Posts and Degree Qualification for Administrative Posts.

Thiru. Balakrishnan also informed that 100% treatment is not possible and asked what about the rest of waste water. He further informed that habitations are located very adjacent to the unit quoting the satellite image and asked regarding the level of dust emission from the unit.

In reply , the unit authorities informed that the dust emission would be below 50 mg/m3 which is within the standards prescribed by the Board.

Thiru. Balakrishnan said that he welcomes the project if there is no adverse effects.

Thiru. S.Sivasankarapandian, Melaneelithanallur

He informed that the Andarkulam area is dry and there is no rain . As a result the ground water is depleted and has become saline. He informed that the area will be developed if the contractual plantation facility is extended to his area also.

Then the District Collector requested the officials to offer their comments about the project.

The General Manager, District Industries Centre ,Tirunelveli pointed out that 316 KLD of water consumption has been expected and asked about the ground water potential and whether necessary clearance have been obtained.

The unit authorities replied that clearance has already been obtained and also stated that the actual consumption would be less than the anticipated demand.

The District Environmental Engineer, TNPC Board commented that the unit has proposed to provide adequate Air Pollution Control measures and waste water treatment facilities .

The Deputy General Manager, Tamil Nadu Energy Development Agency (TEDA), Chennai indicated that approval for the project has also to be obtained from the Standing Committee which comprises of six members including, Member Secretary,

TNPC Board, Tamil Nadu Electricity Board, etc. The approval will be given based on the study conducted through Anna University regarding the availability of agro waste, quantity of power generation from the available waste etc. He also clarified that there is provision for contractual plantation. He informed that the power generated from the proposed project would be connected to Oothumalai Substation and added that the quality of electricity generated locally will be better than that generated and transmitted from far places.

He further told that Auro Mira Bio Power India Limited has already installed a 15 MW power plant at Shanmugapuram, Melamaruthappapuram Village and the unit has obtained Consent to Establish from Tamil Nadu Pollution Control Board and 75% of the works were completed. Meanwhile, the unit has proposed to increase the capacity from 15MW to 18MW in the same premises for which this public hearing was conducted on 28/01/2011. The unit has also proposed to establish one such plant in Kanyakumari District. He also pointed out that the waste water generation and atmospheric emission from biomass power plant will be comparatively less than that of other power plants.

The District Collector intervened and questioned the possibility of using other fuels instead of bio mass . The DGM, TEDA, replied that the project will be constantly monitored by TEDA and TNEB. The District Collector enquired whether the power purchase agreement has been executed with the TNEB

The Assistant Executive Engineer, Non Conventional Energy Source (NCES), TNEB, Tirunelveli informed that the power generated will be connected with Oothumalai Sub station grid of TNEB, At present the substation is connected to Tenkasi , Kayathar grids.

The District Collector concluded the meeting by summing up the proceedings and informed that it will be recorded and submitted to the SEIAA through Tamil Nadu Pollution Control Board.

Encl : as above

District Environmental Engineer,
Tamil Nadu Pollution Control Board,
Tirunelveli.

District Collector,
Tirunelveli

28/01/2011 அன்று காலை 10.00 மணி அளவில் தி/ள் ஆரோ மிரா பயோ பவர் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தால் உத்தேசிக்கப்பட்டுள்ள 18 மெகாவாட் உற்பத்தி திறன் கொண்ட மின்னாலை, சண்முகாபுரம், மேலமருதப்பபுரம் கிராமம், வீர கேரளம்புதூர் வட்டம், திருநெல்வேலி மாவட்டம் தொடர்பான பொதுமக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தின் நடவடிக்கை

முன்னிலை : திரு.மு.ஜெயராமன், இ.ஆ.ப
மாவட்ட ஆட்சித்தலைவர்
திருநெல்வேலி மாவட்டம்

திரு. சீ. பாபுராமநாதன், எம்.இ.
மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
திருநெல்வேலி

கலந்துகொண்டவர்கள் :

தி/ள் ஆரோ மிரா பயோ பவர் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தைச் சேர்ந்த திரு.கிரிதரன் மற்றும் குழுவினர், திரு .பி.ஆர்.முரளிதரன், துணை பொது மேலாளர், தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் சென்னை, திரு.எல்.ஜே. ஜோசப்,, முதன்மை ஒருங்கிணைப்பாளர், தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம், திரு.எ.ராஜராஜன், பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம், திருநெல்வேலி திருமதி.பி.மாரியம்மாள், திட்ட மேலாளர், மாவட்ட தொழில் மையம், திருநெல்வேலி, திரு. ராஜசேகரன் உதவி செயற்பொறியாளர் மரபு சாரா எரிசக்தி துறை, மின்சார வாரியம், திருநெல்வேலி. மேலும் சண்முகபுரம் அதன் சுற்றுப்பகுதியை சேர்ந்த 100க்கும் மேலான பொது மக்கள் கலந்து கொண்டனர் (இணைப்பின்படி)

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அனைவரையும் வரவேற்று பொதுமக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தின் குறிக்கோளை எடுத்துரைத்தார். மாவட்ட ஆட்சித்தலைவர், தி/ள் ஆரோ மிரா பயோ பவர் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தினரை, தங்களை அறிமுகப்படுத்தவும், மின்னாலை திட்டத்தைப் பற்றிய விளக்கத்தினை எடுத்துரைக்கும்படியும் கேட்டுக்கொண்டார். தி/ள் ஆரோ மிரா பயோ பவர் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தினர் தங்களை அறிமுகப்படுத்திய பின் திரு.ஹரிகரன். தலைமை பொறியாளர், அவர்கள் மின்னாலை திட்டத்தினைப் பற்றிய விளக்கத்தினை கணினி வாயிலாக விவரித்தார். அதன் பின் மாவட்ட ஆட்சித்தலைவர் பொதுமக்களை, தொழிற்சாலை பற்றிய கருத்துக்களை கூறுமாறு கேட்டுக் கொண்டார். பொதுமக்களிடம் கருத்து கேட்கப்பட்டு பின்வருமாறு பதிவு செய்யப்பட்டது.

திரு.முருகையா ரெட்டியார், முன்னாள் மாவட்ட பஞ்சாயத்து கவுன்சிலர், சண்முகாபுரம்

200க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்யும் இத்திட்டத்தில் கடைபிடிக்கப்படவுள்ள மாசு கட்டுப்பாடு நடவடிக்கைகள் மற்றும் கழிவு நீர் வெளியேற்றத்தை பற்றி அறிய விரும்புவதாக தெரிவித்தார்.

திரு. கிரிதரன், துணை பொது மேலாளர், தி/ள் ஆரோ மிரா பயோ பவர் இந்தியா பிரைவேட் லிமிடெட் , கழிவு நீர் சுத்திகரிக்கப்பட்டு தொழிற்சாலை வளாகத்தினுள் மரங்கள் வளர்க்க பயன்படுத்தப்படும் என்று கூறினார்

திரு.சி.பரமையா, அண்ணாமலைபுதூர் , மேலமருதப்பபுரம் பஞ்சாயத்து தலைவர்

இவர் தங்கள் பகுதியை சோந்த மக்களில் எத்தனை பேருக்கு வேலை வாய்ப்பு கிட்டும் என வினவினார்.

இதற்கு, தகுதியின் அடிப்படையில் 25% மக்களுக்கு நேரடி வாய்ப்பு கிட்டும் என தொழிற்சாலை தரப்பில் கூறப்பட்டது.

திரு.சரவணவேல்முருகையா, மேலகலங்கல்

பொதுமக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தை வரவேற்ற இவர் இதுபோன்ற தொழிற்சாலைகள் சுற்றியுள்ள கிராமங்களை பாதிக்காத வகையில் நிறுவப்பட்டால்தான் சுற்றியுள்ள கிராமங்களும், நிறுவனமும் வளர்ச்சி அடையும் என்றார்.

ஒப்பந்தத்தின் பேரில் 5 ஏக்கர் நிலத்தில் மரம் வளர்க்கும் தொழிற்சாலையின் கொள்கையையும் வரவேற்ற இவர் இத்திட்டத்தின் மூலம் வேலை வாய்ப்பும், விவசாயிகளுக்கு ஊக்கமும், வருங்கால சந்ததியினருக்கு பயனும் கிட்டும் என தெரிவித்தார்.

மேலும் இவர், ஒரு குதிரைசக்தி மின்சார மோட்டார் இணைப்புடன் கூடிய, 200 முதல் 300 அடி ஆழ் குழாய் கிணறுகளை அமைத்து மரம் வளர்க்க ஆகும் செலவினமான ரூ.60000/- ல் ரூ.50000/- மானியமாக வழங்க மாவட்ட ஆட்சித்தலைவர் தொழிற்சாலையினை கேட்டுக்கொள்ள வேண்டுமென கூறினார்.

மேலும், வி.கே.புதூர் மற்றும் சுரண்டைக்கு உட்பட்ட பகுதிகளை வறட்சி பகுதியாக அறிவித்து அப்பகுதி விவசாயிகளுக்கு மின் இணைப்பு கொண்ட ஆழ்குழாய் கிணறு அமைத்து தரலாம் என பரிந்துரைத்தார்.

இது தொடர்பாக, தங்கள் மேலதிகாரிகளிடம் கலந்து ஆலோசித்து, தொழிற்சாலை மூலமாகவோ அல்லது பிற சமூக நல அமைப்புகள் வாயிலாகவோ இத்திட்டம் பரிசீலிக்கப்படும் என தொழிற்சாலை சார்பாக திரு.கிரிதரன் கூறினார்

திரு.எஸ்.பாலகிருஷ்ணன், சண்முகாபுரம்

இவர் கருத்து கூறும் போது, தொழிற்சாலையில் வேலை வாய்ப்பிற்கான தகுதியைப் பற்றி வினவினார். இதற்கு தொழிற்சாலை நிர்வாகிகள் பதில் அளிக்கும் போது தொழில்நுட்ப வேலைக்கு பொறியியல் பட்டம் அல்லது பட்டயபடிப்பும், நிர்வாக பதவிகளுக்கு பட்டப்படிப்பும் தேவை என கூறினர்.

மேலும் 100% கழிவுநீர் சுத்திகரிப்பு சாத்தியமா எனவும் இயலாத பட்சத்தில் மீதமுள்ள கழிவுநிர் வெளியேற்றம் குறித்து கேள்வி எழுப்பிய திரு.எஸ்.பாலகிருஷ்ணன், தொழிற்சாலையின் அருகில் குடியிருப்புகள் அமைந்துள்ளதாக செயற்கைகோள் புகைப்படத்தை சுட்டிக்காட்டி அருகாமையிலுள்ள குடியிருப்புகளுக்கு எவ்வளவு தூசி பரவும் எனக் கேட்டார்.

இதற்கு பதிலளித்த நிறுவனத்தினர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் நிர்ணயித்துள்ள அளவான 50 mg/m3-க்குட்பட்டே தூசி இருக்கும் என குறிப்பிட்டார்.

திரு.பாலகிருஷ்ணன், இத்திட்டத்தால் எவ்விதமான பாதிப்பும் இல்லை என்றால் இத்திட்டத்தை வரவேற்கிறேன் என்றார்

திரு எஸ் சிவசங்கரபாண்டியன்,மேலநீலிதநல்லூர்

இவர், தங்கள் பகுதியான ஆண்டார்குளம் வறட்சியாகவும், மழை இல்லாததாலும், நிலத்தடி நீர் குறைந்து உவர் தன்மையாக மாறிவிட்டதாக தெரிவித்தார். எனவே, ஒப்பந்த அடிப்படையில் மரம் வளர்க்கும் திட்டம் தங்கள் பகுதிக்கும் விரிவாக்கப்பட்டால் தங்கள் பகுதியும் மேம்படும் என கேட்டுக் கொண்டார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அதிகாரிகளிடம் திட்டம் தொடர்பான தங்கள் கருத்துக்களை கூறுமாறு கேட்டுக் கொண்டார் :

பொது மேலாளர் மாவட்ட தொழில் மையம், திருநெல்வேலி, இத்திட்டத்திற்கு தினமும் சுமார் 316 கிலோ லிட்டர் நீர் தேவைப்படுவதாக தெரிவிக்கப்பட்டதாகவும் நிறுவனம் அமையும் இடத்தில் இதற்கான நிலத்தடி நீர் ஆதாரம் உள்ளதா எனவும், நிலத்தடி நீர் எடுக்க தேவையான அனுமதி பெறப்பட்டுள்ளதா? ஏனக் கேட்டதற்கு தொழிற்சாலை சார்பாக, இது தொடர்பான அனுமதி ஏற்கெனவே பெறப்பட்டுள்ளது என்றும், தொழிற்சாலையில்

பயன்படுத்தப்படும் நீரின் அளவு கணக்கீடு செய்துள்ளதை விட குறைவாகவே இருக்கும் என தெரிவிக்கப்பட்டது

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருநெல்வேலி அவர்கள், இத்தொழிற்சாலை போதிய காற்று மாசு தடுப்பு சாதனங்களையும், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களையும் நிறுவ உத்தேசித்துள்ளதாக தெரிவித்தார்.

துணை பொதுமேலாளர், தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம், சென்னை, கருத்து கூறும் போது, இத்திட்டம், உறுப்பினர் செயலர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தமிழ்நாடு மின்சார வாரியம் உள்ளிட்ட துறைகளைச் சேர்ந்த ஆறு அலுவலர்களைக் கொண்ட குழுவினரிடமிருந்து அனுமதி பெற வேண்டும் எனவும் மேற்படி அனுமதி, அண்ணா பல்கலைக்கழகத்தின் ஆய்வறிக்கையின் அடிப்படையில் வழங்கப்படும் எனவும் குறிப்பிட்டார்.

இத்திட்டத்தால் தயாரிக்கப்படும் மின்சாரம் ஊத்துமலை துணை மின் நிலையத்திற்கு வழங்கப்படும் என்றும், இங்கு தயாரிக்கப்படும் மின்சாரத்தின் தரம், தொலைவிலுள்ள இடங்களில் தயாரித்து அனுப்பப்படும் மின்சாரத்தின் தரத்தை விட சிறப்பாக இருக்கும் எனக் குறிப்பிட்டார்

மேலும் அவர் இந்நிறுவனம், மேலமருதப்பபுரத்சைச் சார்ந்த சண்முகாபுரத்தில் ஏற்கனவே 15 மெகாவாட் திறன் கொண்ட மின்னாலை அமைக்க தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் அனுமதிக்பட்டு, சுமார் 75% வேலைகள் முடிவடையும் நிலையில், தற்போது 18 மெகாவாட் மின்திறனாக அதிகரிப்பது தொடர்பாக, இன்று (28/01/2011) பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டம் நடத்தப்படுகிறது. மேலும் இந்நிறுவனம் இதே போல் ஒரு மின்னாலையை கன்னியாகுமரி மாவட்டத்தில் அமைக்க உத்தேசித்துள்ளதாகவும், இத்தகைய மின்னாலையிலிருந்து வெளியேறும் கழிவுநீர் மற்றும் வாயுக்கழிவுகள் பிற அனல்மின் நிலையம் வெளியேற்றும் கழிவுகளை விட குறைவானதாகவே இருக்கும் என்றார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் வேறு பிற எரிபொருள்களை இத்திட்டத்தில் பயன்படுத்த முடியுமா எனவும், மின்சார விற்பனை ஒப்பந்தம் மின் வாரியத்திடம் பெறப்பட்டுள்ளதா என்றும் கேட்டார். இதற்கு தமிழ்நாடு எரிசத்தி வாரிய நிறுவனத்தின் உதவி பொது மேலாளர், இத்தொழிற்சாலை நடவடிக்கைகள் தமிழ்நாடு எரிசக்தி நிறுவனம் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியத்தால் தொடர்ந்து கண்காணிக்கப்படும் என்று கூறினார்.

உதவி செயற்பொறியாளர், மரபு சாரா எரிசக்தி (NSES), தமிழ்நாடு மின்சார வாரியம், திருநெல்வேலி, தனது கருத்தாக இங்கு உற்பத்தியாகும் மின்சாரம், தற்பொழுது தென்காசி மறறும் கயத்தாரிலிருந்து மின்சாரம் பெறும் ஊத்துமலை துணை மின் நிலையத்தில் சேர்க்கப்படும் என தெரிவித்தார்

இறுதியாக, மாவட்ட ஆட்சித்தலைவர் கூட்ட நடவடிக்கைகளை தொகுத்து, கருத்துகள் பதிவு செய்யப்பட்டு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அணையத்திற்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் வாயிலாக அனுப்பப்படும் என்று கூறி கூட்டத்தினை நிறைவு செய்தார்.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
திருநெல்வேலி

மாவட்ட ஆட்சிததலைவர்
திருநெல்வேலி